## உதவி அமர்வு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா எம்.எஸ்.சி., எம்.எல்.,
உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் புதன் கிழமை

**S.C.No. 345/ 2022**

C.N.R.No.TNTS02-007912-2025

(சங்கரன்கோவில், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின்
முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.31/2017)
பனவடலிசத்திரம் காவல் நிலைய குற்ற எண்.112/ 2016

| | | |
|---|---|---|
| அரசுக்காக :<br>காவல் ஆய்வாளர்,<br>பனவடலிசத்திரம் காவல் நிலையம். | : | ... குற்ற முறையிடுபவர் |
| | : | எதிரிகள் :-<br>1) லட்சுமணன்,<br>த.பெ. பொன்னுசாமி,<br>சாமிநாதபுரம் தெரு,<br>கீழநீலிதநல்லூர்.<br>2) ராமர்,<br>த.பெ. பொன்னுச்சாமி,<br>சாமிநாதபுரம் தெரு,<br>கீழநீலிதநல்லூர்.<br>3) கலையரசன்,<br>த.பெ. பொன்னுச்சாமி,<br>சாமிநாதபுரம் தெரு,<br>கீழநீலிதநல்லூர்.<br>4) மகேந்திரன்,<br>த.பெ. செந்தா<br>நாராயணபுரம் தெரு,<br>கீழநீலிதநல்லூர்.<br>5) பிரபாகரன்,<br>த.பெ. மாடசாமி,<br>நாராயணபுரம் தெரு, |

| | | |
|---|---|---|
| | | கீழநீலிதநல்லூர்.<br>6) மத்தையா<br>த.பெ. மாடசாமி<br>நாராயணபுரம் தெரு,<br>கீழநீலிதநல்லூர்.<br>7) நாகராஜன்,<br>த.பெ. சீவலபேரியன்,<br>சாமிநாதபுரம் தெரு,<br>கீழநீலிதநல்லூர்.<br>8) ஜெயா,<br>த.பெ. பொன்னுசாமி,<br>சாமிநாதபுரம்,<br>கீழநீலிதநல்லூர். |
| அரசுதரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு | : | 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியும், 2 முதல் 7 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியும், 8ம் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 506(2) – ன் படியும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| நீதிமன்றம் எதிரிகள் மீது வனைந்த குற்றச்சாட்டுகள் | | 1, 4, 5, 6, 8 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் கீழும், 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் கீழும், 7ம் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| எதிரிகளின் கூற்று | : | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் நிர்ணயம் | : | 1, 4, 5, 6, 8 எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் கீழும், 2, 3 எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் கீழும், 7ம் எதிரி இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| தீர்ப்பு | : | முடிவாக, 1, 4, 5, 6, 8 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியான குற்றச்சாட்டுகளும், 2, 3 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றச்சாட்டுகளும், 7ம் எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் |

| | | |
|---|---|---|
| | | நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து, 1, 4, 5, 6, 8 எதிரிகளை இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியான குற்றங்களிலிருந்தும், 2, 3 எதிரிகளை இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றங்களிலிருந்தும், 7ம் எதிரியை இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றங்களிலிருந்தும் குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 232–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் இந்நீதிமன்ற பிஆர் எண் 252/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள உடைந்த ஓடுகள் கொஞ்சம். டிவிஸ் |

| | | |
|---|---|---|
| | | எக்ஸ்எல் வாகனத்தின் முகப்பு விளக்கு சிதைந்த துண்டு ஒன்று ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், TN 79 A 3110 Mahendra Centuro மற்றும் TN 79 A 9853 Honda Activa என்ற இருசக்கர வாகனத்தை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 10195/2016 19.12.2016 தேதியிட்ட உத்தரவுபடி செல்வகுமார் என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், TN 76 Z 2011 TVS XL Super என்ற இருசக்கர வாகனம் ஒன்று சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 10194/2016 19.12.2016 தேதியிட்ட உத்தரவுபடி பொன்செல்வராஜா என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது சங்கரன்கோவில் கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களால் 29.12.2017 அன்று முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.31/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு மேல் விசாரணைக்காக திருநெல்வேலி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு இந்த வழக்கானது **அமர்வு வழக்கு எண்.345/2022** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அங்கிருந்து இவ்வழக்கானது தென்காசி கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு 24.04.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற A.No.218/2025 12.09.2025 தேதியிட்ட உத்தரவுப்படி இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று, 10.11.2025 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு **09.04.2026** அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு.R. சுரேஷ், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. சுகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (15.04.2026) இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

1. அரசுத்தரப்பில், கடந்த 29.10.2016 ம் தேதி இரவு 8.30 மணிக்கு 1ம் எதிரி லட்சுமணன் அவரது வீட்டு முன்பு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டாசு வெடி போட்டுக் கொண்டு இருந்தபோது அந்த வழியாக பால் வாங்க சென்ற சாட்சி –5 ஐ பார்த்து 1ம் எதிரி லட்சுமணன் "நாங்க வெடி போடும் பொழுது ஏன் இந்தபக்கம் வருகிறீர்கள் தேவிடியா மகளே" என்று அசிங்கமாக ஏசியதாகவும், 1ம் எதிரி மற்ற எதிரிகளை உடன் அழைத்துக் கொண்டு சுமார் 9.00 மணிக்கு வாதி வீட்டுக்கு வந்து 7ம் எதிரி அருவாளுடன் மற்ற எதிரிகள் 1

முதல் 6 மற்றும் 8 ஆகியோர்கள் கையில் கம்புடனும் புகார்தாரர் பிரகாஷ் வீட்டு முன்பு வந்து நின்றுகொண்டு புகார்தாரர் பிரகாஷ் உறவினர்களை பார்த்து வெளியே "டேய் வாங்கடா புண்ட மக்களா" என்று அசிங்கமாக பேசியதாகவும், எதிரிகள் ஒன்று சேர்ந்து சட்டவிரோதமாக குற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்று கூடி அங்கு வந்ததாகவும், எதிரிகள் கையில் கம்புடனும் போன்ற ஆயுதங்களுடன் புகார்தாரர் பிரகாஷ் வீட்டு முன்பு வந்து கலகம் விளைவித்ததாகவும், 7ம் எதிரி நாகராஜன் புகார்தாரர் பிரகாஷ்-ஐ பார்த்து "எங்களிடமா நீ தகராறு செய்கிறீர்கள் எங்களிடம் தகராறு செய்த நீங்கள் உயிரோடு இருக்க கூடாது இத்தோட செத்து தொலை" என்று கூறிக் கொண்டு புகார்தாரர் பிரகாஷின் தலையை பார்த்து அருவாளால் வெட்டவும் புகார்தாரர் பிரகாஷ் தனது வலது கையால் தடுக்கவும் வலது கையில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், 2, 3 எதிரிகள் கையில் வைத்திருந்த கம்பை கொண்டு புகார்தாரர் பிரகாஷின் தலையில் அடித்து தாக்கியதாகவும், 2, 3 எதிரிகள் சாட்சிகள் 2, 3 ஆகியோர்களை மாறி மாறி அடித்து சிறு காயங்கள் ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் கைகளில் வைத்திருந்த கம்பு அருவாள் ஆகியவைகளை கொண்டு வீட்டில் உள்ள மிக்ஸி மின்விசிறி பிரிட்ஜ் வீட்டின் ஓடு கதவு ஆகியவைகளை அடித்து சேதப்படுத்தியதாகவும் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மூன்று இருசக்கர வாகனங்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியதாகவும், புகார்தாரர் பிரகாஷின் வீட்டில் எதிரிகளால் சுமார் ரூ.60000/- மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் புகார்தாரர் பிரகாஷ் மற்றும் 2 முதல் 5 சாட்சிகளை பார்த்து "இனிமேல் எங்களிடம் தகராறு செய்தால் உங்களை வெட்டிக் கொன்று விடுவோம்" என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே 1 ம் எதிரி இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3- ன் படியும், 2 முதல் 7 எதிரிகள் இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும்

இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியும், 8ம் எதிரி இதச பிரிவுகள் 147, 294(பி), 506(2) –ன் படியும் குற்றங்கள் புரிந்துள்ளதாக பனவடலிசத்திரம் காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகளுக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலேயே வழக்கின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 307 மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக உள்ளதால் இந்த வழக்கு கு.வி.மு.ச பிரிவு 209(அ) பிரிவின்படி அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்கள் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் 1, 4, 5, 6, 8 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியும், 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியும், 7ம் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தனர். எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத்தரப்பில் அசாஆ–1 சான்றாவணம் குறியீடு

செய்யப்பட்டுள்ளது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்ன வென்றால்,**

5. அரசுத்தரப்பில் 1, 4, 5, 6, 8 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியான குற்றச்சாட்டுகளும், 2, 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றச்சாட்டுகளும், 7ம் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

**6) தீர்வு** –

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரிகள் கையில் கம்புடனும் புகார்தாரர் பிரகாஷ் வீட்டு முன்பு வந்து நின்றுகொண்டு புகார்தாரர் பிரகாஷ் உறவினர்களை பார்த்து வெளியே "டேய் வாங்கடா புண்ட மக்களா" என்று அசிங்கமாக பேசியதாகவும், எதிரிகள் ஒன்று சேர்ந்து சட்டவிரோதமாக குற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஒன்று கூடி அங்கு வந்ததாகவும், எதிரிகள் கையில் கம்புடனும் புகார்தாரர் பிரகாஷ் வீட்டு முன்பு வந்து கலகம் விளைவித்ததாகவும், 7ம் எதிரி நாகராஜன் புகார்தாரர் பிரகாஷ்–ஐ பார்த்து எங்களிடமா நீ தகராறு செய்கிறீர்கள் எங்களிடம் தகராறு செய்த நீங்கள் "உயிரோடு இருக்க கூடாது இத்தோட செத்து தொலை" என்று கூறிக் கொண்டு புகார்தாரர் பிரகாஷின் தலையை பார்த்து அருவாளால் வெட்டவும் புகார்தாரர் பிரகாஷ் தனது வலது கையால் தடுக்கவும் வலது கையில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், 2, 3 எதிரிகள் கையில் வைத்திருந்த கம்பை கொண்டு புகார்தாரர் பிரகாஷின் தலையில் அடித்து தாக்கியதாகவும், 2, 3 எதிரிகள் சாட்சிகள் 2, 3 ஆகியோர்களை மாறி மாறி

அடித்து சிறு காயங்கள் ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் கைகளில் வைத்திருந்த கம்பு அருவாள் ஆகியவைகளை கொண்டு வீட்டில் உள்ள மிக்ஸி மின்விசிறி பிரிட்ஜ் வீட்டின் ஓடு கதவு ஆகியவைகளை அடித்து சேதப்படுத்தியதாகவும் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மூன்று இருசக்கர வாகனங்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியதாகவும், புகார்தாரர் பிரகாஷின் வீட்டில் எதிரிகளால் சுமார் ரூ.60000/- மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் புகார்தாரர் பிரகாஷ் மற்றும் 2 முதல் 5 சாட்சிகளை பார்த்து "இனிமேல் எங்களிடம் தகராறு செய்தால் உங்களை வெட்டிக் கொன்று விடுவோம்" என்று கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்பட்டு 1, 4, 5, 6, 8 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3- ன் படியும், 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 - ன் படியும், 7ம் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 - ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கின் புகார்தாரரான அசா-4 பிரகாஷ் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் "2016 ம் ஆண்டு தீபாவளி நேரத்தில் ஒருநாள் என்னுடைய வீட்டை யாரோ உடைத்தார்கள். இரவாக இருந்ததினால் எனக்கு யாரென்று தெரியவில்லை. எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்தை நான் போட்டுக் கொடுத்தேன்" என்று கூறியுள்ளார். அசா.1, புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். அசா-1 அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை.

8. கண்ணுற்ற சாட்சியாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா–1 பொன் செல்வராஜ், அசா–2 செல்வக்குமார், அசா–3 சங்கரபாண்டியன், அசா–5 சீனியம்மாள், அசா–6 வேலுச்சாமி, அசா–7 முத்துக்குமார், அசா–8 சாரதாமணி, அசா–9 வள்ளியம்மாள் ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியத்தில் " எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பாரக்கவில்லை. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது" என்று கூறியுள்ளார்கள். அசா–1, அசா–2, அசா–3, அசா–5, அசா–6, அசா–7, அசா–8, அசா–9 ஆகியோர்கள் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை.

9. இவ்வழக்கின் புகார்தாரரான அசா–4 மற்றும் முக்கிய சாட்சிகளான அசா–1, அசா–2, அசா–3, அசா–5 முதல் அசா–9 ஆகியோர்கள் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் இதர சாட்சிகளை விசாரிப்பதால் எந்த பயனும் ஏற்படாது என்று கருதி அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. எதிரிகளை இந்த வழக்கோடு இணைக்கும் வகையில் எந்த சாட்சியங்களும் அரசுத்தரப்பில் இல்லை. எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவு:**

10. முடிவாக, 1, 4, 5, 6, 8 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியான குற்றச்சாட்டுகளும், 2, 3 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றச்சாட்டுகளும், 7ம் எதிரி மீதான இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல

என்றும் முடிவு செய்து, 1, 4, 5, 6, 8 எதிரிகளை இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307 உ/இ 149, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3– ன் படியான குற்றங்களிலிருந்தும், 2, 3 எதிரிகளை இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றங்களிலிருந்தும், 7ம் எதிரியை இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 307, 506(2) மற்றும் தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பீட்டு சட்டம் பிரிவு 3 – ன் படியான குற்றங்களிலிருந்தும் குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 232–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

11. இவ்வழக்கில் இந்நீதிமன்ற பிஆர் எண் 252/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள உடைந்த ஓடுகள் கொஞ்சம். டிவிஎஸ் எக்ஸ்எல் வாகனத்தின் முகப்பு விளக்கு சிதைந்த துண்டு ஒன்று ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், TN 79 A 3110 Mahendra Centuro மற்றும் TN 79 A 9853 Honda Activa என்ற இருசக்கர வாகனத்தை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 10195/2016 19.12.2016 தேதியிட்ட உத்தரவுபடி செல்வகுமார் என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், TN 76 Z 2011 TVS XL Super என்ற இருசக்கர வாகனம் ஒன்று சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 10194/2016 19.12.2016 தேதியிட்ட உத்தரவுபடி பொன்செல்வராஜா என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், மேல் முறையீடு இருப்பின்

மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.15 19:14:30 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

அரசு தரப்பு சாட்சிகள் : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. பொன்செல்வராஜ்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| 2 | திரு. செல்வக்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. சங்கரபாண்டியன் | கண்ணுற்ற சாட்சி |
| 4 | திரு. பிரகாஷ் | புகார்தாரர் |
| 5 | திருமதி. சீனியம்மாள் | கண்ணுற்ற சாட்சி |
| 6 | திரு. வேலுச்சாமி | கண்ணுற்ற சாட்சி |
| 7 | திரு. முத்துக்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| 8 | திருமதி. சாரதாமணி | கண்ணுற்ற சாட்சி |
| 9 | திருமதி. வள்ளியம்மாள் | கண்ணுற்ற சாட்சி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அசா–4 ன் கையெழுத்து | அ.சா.4 |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>:– இல்லை.
<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : – இல்லை
<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள்</u>:– இல்லை

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.04.15 19:14:36 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.